

# புனித லூர்து மாதா தேவாலயம்


45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, பேராக் மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org




**திருத்தந்தையின் கருத்து: ஆசியாவிலுள்ள சிறுபான்மை சமயத்தினர்: ஆசிய நாடுகளிலுள்ள கிறிஸ்தவர்களும், இதர சிறுபான்மை சமயத்தினரும் தங்களின் விசுவாசத்தை சுதந்திரத்துடன் செயல்படுத்த வேண்டுமென்று**

**ஜனவரி மாத கரு : கிறிஸ்துவில் என்னை உணர்தல்**

## பங்கில் திருப்பலிகள்

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| ஜன 21 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | பொதுக்கால 3-ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ, ம) | பொதுக்கால 3-ஆம் ஞாயிறு |
| | மாலை 5.30 | நவநாள்/ திருப்பலி (த) | கிறிஸ்து அரசர் சிற்றாலயம், புந்தோங் தீகா |
| ஜன 22 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித வின்சென்ட் |
| ஜன 23 செவ் | காலை 9.30 | திருப்பலி (ஆ, த) | மூத்தோர் பணிக்குழு திருப்பலி @ பெர். மை |
| | மாலை 6.30 | திருப்பலி (ஆ) | பொதுக்கால வாரநாள் |
| ஜன 25 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | திருத்தூதர் பவுல் மனமாற்றம் |
| ஜன 26 வெள் | மாலை 6.30 | திருப்பலி (த) | புனிதர்கள் திமோத்தேயு, தீத்து |
| ஜன 27 சனி | காலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித ஏஞ்சலா மெர்சி |
| | காலை 11.00 | திருமணம் (த) | நேசன் ராஜா பிரான்சிஸ் & மோனிக்கா @ பவானி ராமசாமி |
| | மதியம் 2.00 | சடங்கு (ஆ) | ஜான் பிரகாஷ் த/பெ பிரான்சிஸ் & டேபோரா ஜென்சி த/பெ ஜான் |
| ஜன 28 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | மறைக்கல்வி ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ) | மறைக்கல்வி ஞாயிறு |
| | காலை 11.00 | திருப்பலி (ம) | மறைக்கல்வி ஞாயிறு |

## பங்கு நடவடிக்கைகள்

| | | | |
|---|---|---|---|
| ஜன 21 ஞா | காலை 8.30 | பெர். மையம் | மறைக்கல்வி (த) |
| | காலை 10.30 | பெர். மையம் | மறைக்கல்வி (ஆ) |
| | மதியம் 12.00 | ஆலயம் | புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி (த) |
| | மாலை 7.30 | புந்தோங் தீகா | கிஅ சிற்றாலய கூட்டம்- மேற்கு திசை தலைவர்கள் |
| ஜன 22 திங் | மாலை 7.30 | பெர். மை 2-2 | RCIA |
| | மாலை 7.30 | பெர். மை 1-3 | கலாச்சாரக் குழு கூட்டம்- வருகை கட்டாயம் |
| | மாலை 7.30 | பெர். மை 1-2 | நம்பிக்கை மைய கூட்டம்- வருகை கட்டாயம் |
| | மாலை 8.00 | பெர். மை 2-3 | முன்னோன் வாசகர் & திருப்பலி மேற்பார்வையாளர் குழு கூட்டம் |
| ஜன 23 செவ் | காலை 8.30 | பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை குழு |
| | மாலை 7.00 | ஆலயம் | அனைத்து திருப்பலி/ நவநாள்/ ஜெபமாலை ஒத்திகை (த) |
| | மாலை 7.45 | பெர். மை 1-3 | நற்கருணை பணியாளர்கள் கூட்டம் |
| | மாலை 8.00 | முனிசிபல் | அருங்கொடை (த) |
| ஜன 24 புதன் | மாலை 7.00 | ஆலயம் | அனைத்து திருப்பலி/ நவநாள்/ ஜெபமாலை ஒத்திகை (ஆ) |
| | மாலை 8.00 | பெர். மை 1-3 | பெற்றோர் ஆதரவுக்குழு கூட்டம் |
| | மாலை 8.00 | ஆலயம் | புனித அகஸ்டின் பாடல்குழு பயிற்சி (த) |
| ஜன 25 வியா | மாலை 7.00 | ஆலயம் | முன்னோன் வாசகர் பயிற்சி |
| | மாலை 7.30 | பெர். மை 2-2 | RCIA |
| | மாலை 8.00 | பெர். மை 1-3 | எழுப்புதல் குணமளிப்பு ஜெபமாலை |
| | மாலை 8.00 | பெர். மை 1-2 | உபசரிப்பு குழு கூட்டம் |
| ஜன 26 வெள் | மாலை 8.00 | ஜெலாப்பாங் | அருங்கொடை (த) |
| | மாலை 8.00 | பெர். மை 1-1 | இளைஞர்கள் கூட்டம் |
| ஜன 27 சனி | மாலை 5.30 | ஆலயம் | செபமாலை/ சகாய மாதா நவநாள் |
| ஜன 28 ஞா | காலை 8.30 | பெர். மையம் | மறைக்கல்வி (த) |
| | காலை 10.30 | பெர். மையம் | மறைக்கல்வி (ஆ) |

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. மூத்தோர் பணிக்குழு:** அடுத்த ஒன்றுகூடுதல் 23/1/18 (செவ்) காலை 9.30க்கு பெர். மை 1-1ல் திருப்பலியுடன் தொடங்கும். கலந்துக்கொள்ள விருப்பமுள்ளவர்கள் பெயர்களை பங்கு அலுவலகத்தில் 21/1/18 (ஞாயிறு) முன்பாக பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**2. புலூமா திருவிழா:**

- பங்கு திருவிழா கொண்டாட்டம் 2 பிப் ~ 11 பிப் 2018 நடைபெறும். இந்த வருட கொண்டாட்டத்திற்கான கருத்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் குடும்பத்தை பற்றிய ஆவணம்: Amoris Laetitia இதன் அர்த்தம் **"அன்பில் மகிழ்ச்சி"**. அதே கருத்து அனைத்து சிற்றாலயங்களுக்கும் பயன்படுத்தப்படும்.
- **நோயாளர் ஆசீர்வாதம் & புலூமா திருவிழா அன்னையின் திருவுருவ சிலையை சுமந்து செல்பவர்கள்:** தயவு செய்து உங்களது பெயர்களை 2/2/18 (வெள்ளி)க்குள் பங்கு அலுவலகத்தில் அல்லது பங்கு மண்டபத்தில் ஞாயிறு திருப்பலிகளுக்கு பிறகு பதிவு செய்து கொள்ளலாம். தொடர்புக்கு: லூசி (012-5070847)/ திரு. வேளாங்கண்ணி (016-5643235)
- பங்கு திருவிழாவின்போது பொருளாகவோ (உணவு) அல்லது ரொக்கமாக **நன்கொடைகளை** செலுத்த விருப்பமுள்ளவர்கள் பங்கு அலுவலகத்தில் கொடுக்கலாம்.
- 4/2/18 (ஞாயிறு) மாலை 6.00க்கு ஆலயத்தில் அன்னையின் திருவுருவ சிலையை சுமந்து செல்பவர்கள், ELF குழு, திருவழிப்பாட்டாளர், திருப்பலி மேற்பார்வையாளர், உபசரிப்பாளர் & ரேலா ஆகியோருக்கு பவனிக்கான ஒத்திகை நடைபெறும்.

**3. திருத்தொண்டர் திருநிலைப்பாடு:** திரு சந்தனசாமி த/பெ பீட்டர், 3 மார்ச் 2018 சனிக்கிழமை, காலை 10.00மணிக்கு ஈப்போ, புனித லூர்து அன்னை தேவாலயத்தில் திருமணமான திருத்தொண்டராக திருநிலைப்படுத்தப்படுவார். அவர் 25 பிப்ரவரி 2018 மாலை 5.30க்கு ஈப்போ புனித மைக்கல் தேவாலயத்தில் குருவானவரின் திருவழிபாட்டு சடங்கு உதவியாளராகவும், திருநூல் வாசிப்பாளராகவும் சிறிய உத்தரவுகளைப் பெறுவார்.

**4. 2017 கிறிஸ்துமஸ் பஜனை:** எல்லா திசை, தொகுதி, அதிச + பங்கு மக்களுக்கும் ஏழைகளுக்காக நிதி திரட்ட நீங்கள் ஆற்றிய உங்களின் பங்களிப்பிற்கு நன்றி. மொத்தம் **ரிம 9,962.20** திரட்டப்பட்டது. இறைவன் தொடர்ந்து உங்களையும், உங்கள் குடும்பங்களையும் அன்பு மற்றும் பெருந்தன்மை ஆகிய கொடைகளால் ஆசீர்வதிப்பாராக.

**5. பழ கேக் விற்பனை:** மொத்தம் **ரிம 2,150.00** திரட்டப்பட்டது. பெறப்பட்ட தொகை அனைத்தும் ஏழைகளுக்கு கொடுக்கப்படும்

**6. கிறிஸ்து அரசர் சிற்றாலய கட்டிடம் :** கிறிஸ்து அரசர் சிற்றாலய கட்டிடத்திற்காக தம்பூன் கல்லறையில் பூக்கள் விற்பனை செய்யப்பட்டது. அதிலிருந்து திரட்டப்பட்ட நிதி **ரிம 9,701.00**

**7. திருநீற்று புதனுக்கு 2017இல் ஆசீர்வதிக்கப்பட்ட குருத்தோலைகள்:** விபூதி புதனுக்கு பயன்படுத்தப்படும் விபூதி முந்தைய ஆண்டு ஆசீர்வதிக்கப்பட்ட ஓலைகளிலிருந்து வருகிறது. இவ்வாண்டு விபூதி புதன் 14/2/18ல் வருகிறது. தயவு செய்து பழைய ஓலைகளை 11/2/18 (ஞாயிறு) நண்பகலுக்கு முன்பாக ராணியிடம் (தூயகப் பணியாளர்) / பங்கு அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

**8. ஜனவரி மாதம்: திருஇருதய ஆண்டவருக்கு குடும்ப அர்ப்பணிப்பு:** இந்த மாத தலைவர்கள் ஒன்றுகூடுதலின் போது, திருஇருதய ஆண்டவர் உருவப்படமும், செபத்தாளும் உங்களின் சம்பந்தப்பட்ட தலைவர்களின் வழியாக அதிசவில் உள்ள எல்லா குடும்பங்களுக்கும் விநியோகிக்கப்படும். இது குடும்ப செபத்திற்காகவும், குடும்பத்தை இயேசுவின் திருஇருதயத்திற்கு அர்ப்பணிக்கவும் வழங்கப்படுகிறது. தலைவர்களுக்கு வழிமுறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அவர்கள் அதிச ஒன்றுகூடுதலின் போது உங்களுடன் பகிர்ந்து கொள்வார்கள். தயவு செய்து திருஇருதய ஆண்டவரின் உருவப்படத்தையும், செப தாளையும் உங்கள் தலைவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள். இந்த செபத்தை உங்கள் குடும்பத்தாருடன் சேர்ந்து செபியுங்கள்.

**9. மண்டப சீரமைப்பு:** நமது லூர்து மண்டபம் வருந்ததக்க நிலையில் உள்ளது. நான் கடந்த ஆண்டு அறிக்கைத்தாளில் அறிவித்தப்படி நாம் மண்டபத்தை சீரமைக்க உள்ளோம். குளிரூட்டிகளுடன் புதிதாக சீரமைக்கப்பட்ட மண்டபம், பங்கு வருவாயை அதிகரிப்பதற்காக திருமணங்களுக்கும், மற்ற நோக்கங்களுக்காகவும் வாடகைக்கு விடப்படும். உங்களுக்கு ஏதேனும் கடுமையான, செல்லத்தக்க காரணங்கள் (நியாயமான எதிர்ப்புகள்) இருந்தால் கட்டுமான வேலை தொடங்குவதற்கு முன்பே, பங்கு குருவானவர்களிடம் தெரிவியுங்கள்.

**10. 2018க்கான பங்கு கருத்து:** "கருணை மற்றும் தன்னலமற்ற பணி"யை நாம் 2018க்கான கருத்தாக தேர்ந்தெடுத்துள்ளோம். இவ்வாண்டில் 5 பிறரன்பு திட்டங்கள் 5 திசைகளால் மேற்கொள்ளப்படும். அதிச தலைவர்களுடன் திசை தலைவர்கள் இணைந்து ஏற்பாடு செய்யும் இத்திட்டங்கள் பஒகு (PAT) மேற்பார்வையினாலும் உதவியுடனும் செயல்படுத்தப்படும். ஆண்டு இறுதி மதிப்பீடு இதையொட்டியே இருக்கும்.

**11. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி டிசம்பர் 2017 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **369,972.82** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **372,602.92** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

**14/01/18 திருப்பலி வசூல்கள்:** காலை 7.00 - RM 1,150.60 காலை 9.00 - RM 1,777.20 **மொத்தம்** - RM 2,927.80
**2017** - RM 45.00 **2018** - RM 90.00 **மொத்தம்** - RM 135.00 **ஏழைகளுக்கு** - RM 3,041.90

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம் என்று ஆங்கிலத்தில் எழுதவும்